14 NOV 2008
சென்னை-600 005

## சுருக்கம்

நகராட்சி நிர்வாகம் – மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் அரசு / உள்ளாட்சி செலவில் கட்டி முடிக்கப்பட்ட நவீன எரிவாயு தகன மேடையை பராமரிக்க தனியார் அறக்கட்டளை மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்குதல் – மற்றும் நிபந்தனைகள் விதித்தல்–ஆணை வெளியிடப்படுகிறது.

---

### நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி3) துறை

அரசாணை (நிலை) எண்.228 நாள் 13.11.2008

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.122/நநிமகுவ(நநி3)துறை நாள் 27.06.2008
2. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.33582/ 2007/ப்பி3 நாள் 19.09.2008

/////

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் புதிய நவீன மின்மயானம் மற்றும் எரிவாயு மயானம் அமைக்க தனியார் அறக்கட்டளை மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கும் அதிகாரத்தை நகராட்சிகள் / மாநகராட்சிகளை பொறுத்தமட்டில் (சென்னை மாநகராட்சி நீங்கலாக) நகராட்சி நிர்வாக ஆணையருக்கும், பேரூராட்சிகளை பொறுத்த வரை பேரூராட்சிகள் ஆணையருக்கும் சென்னை மாநகராட்சியைப் பொறுத்தமட்டில் அதன் ஆணையாளருக்கும், வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் தனியார் அறக்கட்டளை மற்றும் தனியார் நிறுவனங்கள் பின்பற்றவேண்டிய 21 நிபந்தனைகளையும் மேற்படி அரசாணையில் பிற்சேர்க்கையாக வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், நகராட்சி நிர்வாக ஆணையர் 2006–2007 மற்றும் 2007–08ஆம் ஆண்டுகளில் பகுதி–2 திட்டத்தின் கீழ் முறையே 38 மற்றும் 14 நகராட்சிகளில் நவீன எரிவாயு மயானம் அமைக்க ஒவ்வொரு யூனிட்டுக்கும் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தவும், அதில் 50% தொகையை அரசு மானியமாகவும் அளித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது என்றும், இதன்படி பல நகராட்சிகளில் நவீன எரிவாயு மயானப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளதால் இவைகளை பராமரிக்க தனியார் அறக்கட்டளை மற்றும் தனியார் நிறுவனங்கள் முன்வந்துள்ளன என்றும், இவைகளை உள்ளாட்சி அமைப்புகள் நிறுவி, தனியார் அறக்கட்டளை வாயிலாக பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்றும் தெரிவித்து, மேலே பத்தி–1ல் குறிப்பிடப்பட்ட அரசாணை மற்றும் நிபந்தனைகள் உள்ளாட்சி

அமைப்புகளால் நிறுவப்பட்டுள்ள எரிவாயு மயான அமைப்புகளுக்கு முழுமையாக பொருந்தாது என்பதால் 18 புதிய வரைவு நிபந்தனைகளை அரசின் பரிசீலனைக்காக அனுப்பியுள்ளார். எனவே, நகராட்சி மற்றும் மாநகராட்சிகளால் அரசு / உள்ளாட்சி செலவில் தற்போது கட்டப்பட்டு, முடியும் தருவாயில் உள்ள எரிவாயு மயானங்களை பராமரிக்க தனியார் அறக்கட்டளை மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்குவதற்கு புதிய நிபந்தனைகளுடன் ஆணைகள் வழங்கும்படி நகராட்சி நிர்வாக ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பை அரசு நன்கு பரிசீலனை செய்து அதனை ஏற்று, மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் அரசு மற்றும் உள்ளாட்சி செலவில் கட்டி முடிக்கப்பட்ட நவீன எரிவாயு தகன மேடையை இவ்வாணையின் பிற்சேர்க்கையில் உள்ள 18 நிபந்தனைகளுக்குட்பட்டு பராமரிக்க தனியார் அறக்கட்டளை மற்றும் தனியார் நிறுவனங்கள் முன்வந்தால், அவர்களுக்கு அனுமதி வழங்கும் அதிகாரத்தை நகராட்சிகள் / மாநகராட்சிகளைப் பொறுத்தமட்டில் (சென்னை மாநகராட்சி நீங்கலாக) நகராட்சி நிர்வாக ஆணையருக்கும், பேரூராட்சிகளைப் பொறுத்த வரை பேரூராட்சிகள் ஆணையருக்கும் சென்னை மாநகராட்சியை பொறுத்த மட்டில் அதன் ஆணையாளருக்கும் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே.தீனபந்து,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை –5
பேரூராட்சிகளின் ஆணையர், குறளகம், சென்னை –108
ஆணையாளர், சென்னை மாநகராட்சி, சென்னை –3
அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சி ஆணையாளர்கள்
(நகராட்சி நிர்வாக ஆணையரின் மூலம்)
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை –9
ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் சிறப்பு
நேர்முக உதவியாளர், சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.1/ மாந.2/ மாந.6 / பேரூ.2 மற்றும் அந.2) துறை, சென்னை –9
இ.கோ./உ.ந.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர். 13/11/08

ந.நி(ம)கு.வ(நநி3)துறை

பிற்சேர்க்கை

**மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சியால் கட்டி முடிக்கப்பட்ட எரிவாயு தகனமேடையை பராமரிக்க தனியார் அறக்கட்டளை மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்குவது குறித்த நிபந்தனைகள்**

1. மாநகராட்சி / நகராட்சி / பேரூராட்சியால் கட்டி முடிக்கப்பட்ட எரிவாயு தகனமேடை பராமரிப்பிற்கு தனியார் அறக்கட்டளை மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு மாநகராட்சி/ நகராட்சியின் / பேரூராட்சியின் மன்ற அனுமதி பெற்று வழங்கலாம். குத்தகைக்கு விடக்கூடாது.
2. எரிவாயு மயானம், காரியங்கள், இறுதி சடங்கு நிகழ்ச்சிகள் தவிர வேறு எந்தக் காரியங்களுக்கும், நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுத்தக்கூடாது. எந்த சட்ட விரோத நிகழ்ச்சிகளும் அங்கு நடைபெற அனுமதிக்கக் கூடாது.
3. ஒலி, ஒளி பெருக்கிகளை அறக்கட்டளை / நிறுவனம் பயன்படுத்தக் கூடாது. இந்த இடத்தை பயன்படுத்துவது சம்மந்தமாக, சென்னை மாநகராட்சி ஆணையர் / நகராட்சி நிர்வாக ஆணையர் / பேரூராட்சிகளின் ஆணையர் அவ்வப்போது வகுக்கும் விதிமுறைகளுக்கும், ஆலோசனைகளுக்கும் இதர சட்ட விதிமுறைகளுக்கும் அறக்கட்டளை / நிறுவனம் கட்டுப்பட வேண்டும்.
4. மேற்படி இடத்திலுள்ள பொருட்கள் ஏதேனும் களவாடப்பட்டிருந்தாலோ அல்லது எந்த வகையிலும் சொத்துக்கு சேதம் விளைவிக்கப்பட்டிருந்தாலோ அதற்கு பராமரிக்கும் நிறுவனமே முழுப் பொறுப்பாகும்.
5. எரியூட்டும் இயந்திர புகைப்போக்கிகள், புகை வெளியேறுவதால் சுற்றுப்புற சூழ்நிலைகளை பாதிக்காத வகையிலும் தக்க உயரத்திலும் மாசு கட்டுப்பாட்டு வாரிய விதிமுறைகளின்படி பராமரிக்கப்பட வேண்டும்.
6. மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அனுமதி தேவைப்படுமென கருதும் பட்சத்தில் மேற்படி அனுமதி மற்றும் தடையில்லாச் சான்றை உள்ளாட்சி சொந்த பொறுப்பில் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

7. நவீன மயானத்தினை பயன்படுத்துவோர்கள் செலுத்த வேண்டிய கட்டணத்தை மன்றத் தலைவர் / ஆணையாளர் / செயல் அலுவலர், சுகாதார பிரிவு அதிகாரி மற்றும் நிறுவனத்தை சார்ந்த ஒருவர் கொண்ட குழு ஒவ்வொரு வருடமும் நிர்ணயிக்கலாம். இக்கட்டணம், இலாப நோக்கமின்றி செலவுகளை சரிக்கட்டும் விதமாக நிர்ணயிக்கப்பட வேண்டும்.

8. ஜாதி, மத, இன வேறுபாடின்றி அனைவரும் பயன்பெறும் வகையில் பொது எரிவாயு மயானமாக பயன்படுத்திட வேண்டும்.

9. எரிவாயு மயானத்தைச் சுற்றி தோட்டம் அமைத்தல், செடிகளுக்கு தண்ணீர் ஊற்றுதல், காவல் அரண் அமைத்தல் மற்றும் மயானத்தைச் சுற்றி மதிற்சுவர் எழுப்புதல் ஆகிய செலவினங்களை தனியார் அறக்கட்டளை / நிறுவனம் ஏற்க வேண்டும்.

10. எரிவாயு மயானத்தில், அறக்கட்டளை / நிறுவனம் எந்தவித கூரை வேய்ந்த கட்டிடமோ அல்லது எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்கள் கொண்ட கூரையோ கண்டிப்பாக அமைக்கப்படக் கூடாது.

11. எரியூட்டும் சடலம் தொடர்பாக பின்னாளில் எழும் சட்டப் பிரச்சனைகளுக்கு நிறுவனமே பொறுப்பேற்க வேண்டும்.

12. முதன்முதலில் பராமரிப்பு பொறுப்பு ஏற்ற நாளிலிருந்து 3 வருட காலத்திற்கு மட்டுமே எரிவாயு மயான பராமரிப்பு அறக்கட்டளை / தனியார் நிறுவனம் பராமரிக்க அனுமதிக்கப்படும். கால நீட்டிப்பு தேவைப்படின் ஆறு மாத காலத்திற்கு முன்பாகவே சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் விண்ணப்பிக்க வேண்டும். இந்த விண்ணப்பத்தினை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள் புதுப்பித்து / நிராகரித்து ஆணை பிறப்பிக்க வேண்டும்.

13. பராமரிக்க ஒப்படைக்கப்பட்ட பிறகு கூடுதல் கட்டுமானம் ஏதும் தேவைப்படின் உள்ளாட்சியின் அனுமதி பெற்றே வேலைகள் செயல்படுத்த வேண்டும். பராமரிப்பு அனுமதி முடிந்த பிறகு திருப்பி ஒப்படைக்கும்பொழுது இதற்கு எந்தவித இழப்பீடும் உள்ளாட்சி வழங்காது.

14. அறக்கட்டளை / நிறுவனத்தினர் பராமரிப்பை நிறுத்திக் கொள்ள விரும்பினால் மாநகராட்சி / நகராட்சிக்கு ஆறு மாத காலத்திற்கு முன்பே அறிவிப்பு முறையாக வழங்க வேண்டும்.

15. பராமரிப்பு அனுமதியை புதுப்பிப்பதும், மறுப்பதும் உள்ளாட்சியின் முடிவை பொறுத்தது. அனுமதி மறுக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட தனியார் அறக்கட்டளை / தனியார் நிறுவனங்கள், தாங்கள் நிறுவிய அனைத்து கூடுதல் உபகரணங்கள் / கட்டடங்களுக்கு எந்தவித இழப்பீடும் கோராமல் உள்ளாட்சி நிறுவனத்திற்கு ஒப்படைக்க வேண்டும்.

16. எரிவாயு மயானம் அமைக்க உரிமம் பெற்ற தனியார் நிறுவனம் / அறக்கட்டளை, இறந்தவரின் பெயர், தகப்பனார் / தாயார் பெயர், வயது, முகவரி, எரிவாயு மயானம் பயன்படுத்தப்பட்ட நாள் மற்றும் நேரம், பெறப்பட்ட தொகை முதலிய விபரங்கள் அடங்கிய பதிவேட்டினை பராமரிக்க வேண்டும்.

17. மேற்கண்ட நிபந்தனைகள் அனைத்தையும் சம்மதித்து ஒப்பந்தப் பத்திரம் உள்ளாட்சிக்கு அறக்கட்டளை / நிறுவனம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

18. மேலே உள்ள நிபந்தனைகளில் எந்த ஒரு நிபந்தனையாவது மீறப்பட்டாலும் வழங்கப்பட்ட அனுமதி ரத்து செய்யப்படும்.

கே.தீனபந்து,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

13/11/08
பிரிவு அலுவலர்.